புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# அன்னை மரியா அந்தாதியில் திருவிவிலியத் துளிகள்

*LINCY.C,*
*Research Scholar,*
*Dept.Of Tamil & Research Centre,*
*Govt. College Chittur, Palakkad – 678 104*

ஆய்வுச்சுருக்கம்

காலங்களின் பதிவுகளை நிலைநிறுத்துவதில் இலக்கியங்கள் சிறந்த பங்காற்றுகின்றன. சூழலுக்கு ஏற்ப மாற்றம் பெற்றுவரும் சமூக அமைப்புகளை இலக்கியங்கள் அவ்விதமே உள்வாங்கி வெளிப்படுத்துவதைக் காணலாம். படைப்பை அது தோன்றும் காலத்திற்கு ஏற்ற வகையில் வெளிக்கொணர முயற்சிப்பதே படைப்பாளியின் நோக்கமாகும். இலக்கியங்களைப் பொதுவாக பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இருவகையாகக் கூறுவர். உறுதிப்பொருள்களை முழுமையாகக் கொண்டு உருப்பெற்றுள்ளவை பேரிலக்கியம் ஆகும். உறுதிப்பொருள் நான்கும் இடம்பெறாமல் ஒன்றோ, சிலவோ குறைந்து வரும் இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள். புலவர்கள் தனிநபரை மையமாகக் கொண்டு தங்கள் படைப்புகளை அமைக்கத் துவங்கியபோது சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெறலாயின. சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படினும் மிகுதியானோர் சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறுவகை எனக்கூறுவர். இவ்வாறான சிற்றிலக்கியங்களில் ஒன்றாக அந்தாதி வகையில் உட்படுவது அன்னை மரியா அந்தாதி என்ற கிறித்துவ சிற்றிலக்கிய நூல். அந்தாதி அமைப்புமுறையைச் சார்ந்ததாக இருந்தாலும் இந்நூலகத்து மதக்கருத்துக்களும் பதிவாகியுள்ளதைக் காணலாம்.அதனை அடிப்படையாகக் கொண்டு கிறித்துவ மதத்தின் முக்கிய நூலான திருவிவிலியத்திலும் அன்னை மரியா அந்தாதியிலும் ஒன்றுபட்டுக் காணப்படும் தகவல்களை ஆய்ந்துரைக்கும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

முன்னுரை

இலக்கியச் செழுமைக்காகவும், மக்களின் உள்ளங்களில் அறச்சிந்தனைகளை விதைக்கும் நோக்கிலும் இலக்கியங்கள் தோன்றலாயின. அப்படைப்புகளின் வெற்றியை உணர்ந்த மதப்பரப்புச் சிந்தனையாளர்கள் இலக்கியங்களையும் ஒரு கருவியாக பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். கிறித்துவத் தொண்டர்களும் இம்முயற்சியைக் கையாண்டுள்ளனர் என்பதை அவர்களது படைப்புகள் உறுதிசெய்கின்றன. எனவேதான், பற்பல தமிழ் கிறித்துவ இலக்கியங்களும் இலக்கிய உலகில் நிலைத்து நிற்பதைக் காணமுடிகிறது. அவ்வகையில் தோன்றிய இலக்கியங்களில் குறவஞ்சி, அந்தாதி, அம்மானை, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களையும் அதற்கேற்ற வாயிலாக அவர்கள் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். அச்சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான அந்தத்தை ஆதியாக உடைய அந்தாதி வகையைச் சார்ந்ததே அன்னை மரியா அந்தாதி என்ற நூல். ஆசிரியர் ஞா.குழந்தைசாமி அவர்கள் இந்நூலைப் படைத்துள்ளார். இயேசுவின் தாயாம் அன்னையின் புகழினை பறைசாற்றும் வகையில் இந்நூலின் உள்ளடக்கம் காணப்படுகிறது.கிறித்துவ மதத்தின் அடிப்படை நூலாகிய திருவிவிலியத்தில் காணப்படும் சில செய்திகளை அன்னை மரியா அந்தாதியில் ஆசிரியர் உட்படுத்தியுள்ளார். திருவிவிலியத்திலும் அன்னை மரியா அந்தாதியிலும் ஒத்ததன்மையதாய் காணப்படும் தகவல்களில் பெரும்பாலும் இயேசுவின் தாயாம் அன்னையைக் குறித்தவையாகவே அமைந்துள்ளன. இருநூல்களிளும் ஒன்றுபோலக் காணப்படும் தகவல்களை

திருவிவிலியத்தின் இன்றியமையாமை, அன்னையின் - தாய்மைப் பண்பு, குணநலன், வாழ்த்து என்னும் பொருண்மையில் ஆராயும் வகையில் இவ்வாய்வின் கருதுகோள் அமைந்துள்ளது.

### ஆய்வு நெறிமுறைகள்

ஆய்விற்காக பகுப்புமுறை, விளக்கமுறை, ஒப்பீட்டுமுறை போன்ற ஆய்வு நெறிமுறைகள் கையாளப்பட்டுள்ளன. அன்னை மரியா அந்தாதியில் காணப்படும் திருவிவிலியக் கருத்துக்களை வகைப்படுத்துவதற்காக பகுப்புமுறை ஆய்வு பின்பற்றப்பட்டுள்ளது. அந்தாதி நூலில் இடம் பெற்றுள்ள திருவிவிலியச் சிந்தனைகளை தெளிவுபடுத்துவதற்காக விளக்கமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பீட்டு முறையானது அன்னை மரியா அந்தாதியில் காணப்படும் திருவிவிலியச் செய்திகளை திருவிவிலியத்துடனும் பிற நூல்களுடனும் இணைத்து ஆராய்வதற்காக கையாளப்பட்டுள்ளது.

### திருவிவிலியத்தின் இன்றியமையாமை

கிறித்துவ மதம் திருவிவிலியத்தை தனது அடிப்படை நூலாகக்கருதி அதனை மையமாகக்கொண்டு மதக்கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்துள்ளது. உலகைக் கடவுள் எவ்வாறு படைத்தார் என்றும், முதல் மனிதனாம் ஆதாம், அவனது மனைவி ஏவாள் ஆகியோரின் உருவப் படைப்பு முதலாக உள்ள அனைத்துச் செய்திகளையும் திருவிவிலியத்தில் உள்ள தொடக்கநூல் கூறுகிறது. எனவேதான், கிறித்துவர்கள் திருவிவிலியத்தை மையமாக வைத்து தங்களது நம்பிக்கையை வேரூன்றச் செய்துள்ளனர். திருவிவிலியத்தில் உள்ள வசனங்களை இறைவார்த்தை என்று கூறுவர். அந்த இறைவார்த்தையின் இன்றியமையாமையை
"மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்." [1]
எனும் விவிலிய வசனம் உறுதிப்படுத்துகின்றது. திருவிவிலியத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் அன்னை மரியா அந்தாதியிலும் சில பாடல்கள் திகழ்கின்றன.

"மாதா உம்மை மனத்தில் எண்ணி
மகிழ்ச்சி கொண்டிடுவோம் – உயர்
வேதா கமத்தின் விளக்கம் கண்டு
வேண்டி நின்றிடுவோம்"[2]

இவ்வாறு கூறுவதன் வாயிலாக மரியின் உதவியோடு இறைமகன் இயேசுவை அடைவது எளிமையானது என ஆசிரியர் உணர்த்துவதைக் காணலாம்.

### தாய்மைப் பண்பு

தாய்மைக்கு நிகராக நாம் எவ்வுயிரையும் இணைத்துப் பேசமுடியாது. தன் உயிரையும் தனது குழந்தைக்காக தாய் மட்டுமே கொடுப்பாள். தாயின் அரவணைப்பையும், அறிவுரையையும் கேட்டு வளரும் குழந்தை ஒருநாளும் வழிதவறிச் செல்லாது.

"தாயிற் சிறந்தொரு கோவிலு மில்லை"[3]

என மொழியும் ஔவையின் சொல் மூலமாக நாம் அதனை உணரலாம். குழந்தையைப் பெற்றெடுப்பதற்காகப் பல இன்னல்களையும் பெற தயாராகி மனமகிழ்வது தாய்மையின் சிறப்பு.

### கன்னித்தூய்மை

ஒரு பெண் ஆண் மகனோடு இணையும்போது அவளது கன்னிமை கெட்டுவிடும். அதாவது, தூய்மையாக இருந்த அவளது உடல் மாசடைந்துவிடும் என மொழிவர். திருவிவிலியத்தின் அடிப்படையில் கிறித்துவர்களின் நம்பிக்கையானது இயேசுவின் பிறப்பினை மனித விருப்பத்தினாலன்றி, தூய ஆவியால் உருப்பெற்றதாகக் கூறுவர். மரியாவும் யோசேப்பும் திருமணமாய் கூடி வாழும் முன்பே மரியா கருவுற்றதாகவும் அச்செய்தியை தூதர் கனவில் தோன்றி அவருக்கு அறிவித்ததுமான பதிவுகளைத் திருவிவிலியத்தில் காணலாம்.
"யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான்." [4]

என்ற வசனம் அதனை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. பாவக்கறை சற்றும் படியாமல் கடவுளின் திட்டப்படி படைக்கப்பட்டவரே இறைமகன் இயேசு என்பதை அன்னை மரியா அந்தாதியில் காணப்படும்

"மாசற்ற கன்னிகையே மதிமுகப் பெண்மணியே
மாதவனைப் பெற்றதாயே" [5]

என்னும் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. இச்சான்றுகள் வாயிலாக இறைக்குமாரன் இயேசுவிற்கு அன்னையானவள் தூய்மையான முறையில் அவதாரம் கொடுத்துள்ளாள் என உணரமுடிகிறது.

இயேசுவின் பிறப்பு

கிறித்துமதக் கொள்கைப்படி ஆண், பெண் இருவரின் விருப்பத்திற்கு ஏற்ப பிறக்கும் அனைத்துக் குழந்தையும் சென்மப் பாவத்தினால் ஆட்கொள்ளப்படும் என நம்பப்படுகிறது. எனவேதான், அந்த பாவத்திலிருந்து குழந்தையை மீட்டு தூய்மைப்படுத்தும் 'திருமுழுக்கு' என்னும் ஒரு முறையைக் கிறித்துவர்கள் மேற்கொள்கின்றனர். இயேசுவிற்கு 'மீட்பர்' என்றொரு பெயர் உண்டு. உலக மக்களைப் பாவத்திலிருந்து மீட்பவர் என்பதே அதன் பொருள். அத்தகைய மீட்பராம் இயேசு மாசின்றி பிறந்தால் மட்டுமே பாவிகளை மீட்க முடியும் என உணர்ந்தார் விண்ணகத் தந்தையாம் கடவுள். ஆதலால், தூய்மையான முறையில் இயேசு பிறப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைத் தந்தையாம் கடவுள் கையாண்டுள்ளார். இதனை திருவிவிலியத்தில் பல இடங்களில் காணலாம். அதனை ஒத்த தன்மையதான முறையில் அன்னை மரியா அந்தாதி

"நிலைத்த புகழை நீயே பெற்றாய்
நிமலனை ஈன்றதனால்"[6]

என்ற பாடல் வரிகளில் மரியின் மாசற்ற தன்மையினையும், மீட்பராம் இயேசுவின் மாசற்றப் பிறப்பினையும் கூறுகிறது.

தாய்மை அன்பு

அளவிட்டுச் சொல்லமுடியாத அளவு வரையறையின்றித் திகழ்வதே தாய்க்கும் சேய்க்குமான உறவு. உடலும் உயிரும் போன்றதான ஒரு அமைப்பு முறையை நாம் தாய்-சேய் அன்பிற்கு உரிய சான்றாகக் கூறலாம். அன்னை மரியாவும் தனது மகன் இயேசுவின்மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார். இயேசு பன்னிரு வயதுக் குழ்ந்தையாக இருந்தபோது அவரது பெற்றோர் அவரை எருசலேம் கோவில் திருவிழாவிற்கு அழைத்துச் சென்றனர். வீடு திரும்பிய அவர்கள் காணாமல் போன இயேசுபிரானைத்தேடி கோவிலில் கண்டடைந்தனர். அந்நிகழ்வினை திருவிவிலியத்தில் காணப்படும் லூக்கா நற்செய்தி இரண்டாவது அதிகாரம் கூறுகிறது. இத்தகைய மரியின் தாய்மையுணர்வு தொடர்பான தகவல்களையும் நாம் அன்னை மரியா அந்தாதியில் காணலாம்.

"மாதா உந்தன் மகனைக் கொல்ல
மன்னன் ஆணையிட – அவர்தம்
தூதர் பறந்து வருவ தறிந்து
துடித்துப் போனவளே "[7]

என்னும் பாடல் குழந்தை இயேசு பிறந்துள்ளதை அறிந்த ஏரோது அரசன், இயேசுவைக் கொல்ல திட்டமிட்டதை அறிந்த அன்னையின் உள்ளக் கலக்கத்தை நமது கன் முன்னர் காட்சிப்படுத்துகிறது.

உலகின் தாய்

அன்னை மரியா உலகினர் அனைவருக்கும் தாய். அனைவருக்கும் தாயானவள் என்பதாலேயே 'அன்னை' என்ற பெயரை மரியாவிற்கு சூட்டினர் போலும். ஏவாள் என்ற பெண்ணின் வாயிலாக பாவம் என்பது மனித குலத்திற்கு விதைக்கப்பட்டது என்பதை திருவிவிலியத்திலுள்ள தொடக்கநூல் கூறுகிறது. ஏவாள் என்ற பெண்ணால் நுழைந்த பாவத்தை வெல்ல மரியா என்ற இன்னொரு பெண் வழிவகுத்தால் என்பதை கிறித்து மதம் கூறுகிறது. உலக இரட்சகராம் இயேசு தனது தாயாம் அன்னை மரியாவை உலக மாந்தர் அனைவருக்கும் அன்னையாக அர்ப்பணித்துள்ளார் என்பதனை

“இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், “அம்மா, இவரே உம் மகன்” என்றார்.” பின்னர் தம் சீடரிடம், “இவரே உம் தாய்” என்றார்”[8]

இவ்வசனத்தில் இயேசு சிலுவை அடியில் வைத்து தாயிடமும் தனது சீடரிடமும் கூறியதை நாம் காணலாம். எனவே, உலக மாந்தர் அனைவருக்கும் 'அம்மா' என்ற அன்புறவைப் பெற்றாள் மரியா. இதன் வாயிலாக அனைவருமே அன்னையின் சந்ததியினர் ஆக்கப்பட்டனர் என்பதை

“வாய்ப்பு எனக்கு வந்தது உந்தன்
வாரிசு நானாக”[9]

என்ற பாடல் வரிகளில் அன்னை மரியா அந்தாதி ஆசிரியர் உணர்த்துகிறார். எனவே, மரியைத் தாயாகப் பெற்று இறைமகன் இயேசுவின் உடன்பிறப்புகளாகக் கருதப்படும் மானிடர் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என இயேசு கருதியதை வெளிப்படுத்தும் விதமாக இக்கருத்தை ஆசிரியர் வலியுறுத்துவதைக் காணலாம்.

இறைமகனின் தாய்

மூதாதையரின் கடவுளாம் இறைவனும் அனைத்துலக வேந்தருமான பிதா தனது மக்களின் மனமாற்றத்திற்காக தனது குமாரனை அனுப்ப எண்ணினார். ‘முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்’ என்பதுபோல, மக்கள் மத்தியில் அவர்கள் உருவிலேயே மகனைப் படைத்தனுப்ப முன் வந்தார் தந்தைக் கடவுள். அவ்வாறு மண்ணகத்தில் தோன்றிய இயேசுவும் மக்களின் இயல்பில் ஒன்றிணைந்தவராய் நற்செய்தியைப் பறைசாற்றினார். கடவுளின் பிள்ளைகளாக இறைத்திட்டத்திற்கு ஏற்ப செயல்பட்டு வாழ்ந்தாலும், அரசாங்க அமைப்பிற்கும் கட்டுப்பட்டு வாழவேண்டும். அரசிற்கு செலுத்த வேண்டிய வரியைத் தவறாமல் செலுத்த வேண்டும் என்றெல்லாம் மக்களிடம் இயேசு போதித்ததை திருவிவிலியத்தில் நாம் காணமுடிகிறது. மக்களின் பாவங்களைக் கழுவும் திருமுழுக்கை அளித்து போதனைபுரிந்தவர் திருமுழுக்கு யோவான். அத்திருமுழுக்கைத் தானும் ஏற்றுக்கொள்வதாக மக்களுக்கு அறிவிக்க இறைமகன் இயேசுவும் திருமுழுக்கைப் பெற்றார். யோவான் இயேசுவிற்குத் திருமுழுக்கு கொடுத்த உடனேயே கடவுளின் ஆவி புறா வடிவில் இயேசுவின்மீது தோன்றி,

“என் அன்பார்ந்த மகன் இவரே, இவர் பொருட்டு
நான் பூரிப்படைகிறேன். “[10]

எனக் கூறியதை திருவிவிலியம் காட்சிப்படுத்துகின்றது. இதன் மையப்பொருளை வெளிப்படுத்தும் விதமாக அன்னை மரியா அந்தாதியில்,

“அதுவோ அரிய காட்சியாய் யோவான்
அகத்தில் எழுந்ததுவே – தீமை
எதுவோ அதுவே எதிர்த்து நின்று
இழந்தது தன் ஆற்றல் – அங்கு
மெதுவாய் ஒலித்த குரலொலி தானும்
மெசியா பேசியதே “[11]

இவ்வாறாக ஆசிரியர் கூறியுள்ளார். இவ்வரிகளாவன, அன்னை மரியா இயேசுவைப் பத்து மாதம் கருத்தாங்கி ஈன்ற தாய் என்றாலும் அவரைப் படைத்தவர் இறைவன் என்பதை தெளிவுபடுத்துகின்றன. எனவே இறைமகனின் தாய் எனவும் அழைக்கப்படத் தகுதி உள்ளவளாய் அன்னை காணப்படுகிறாள்.

குணநலன்

பணத்தால் அறிமுகம் செய்யப்பட்ட பிரபலங்கள் பல சூழல்களில் தோற்றுப்போவதுண்டு. ஆனால் குணத்தால் சிறந்து, பணப் பின்புலனில் சரிந்திருந்தாலும் மக்கள் மனதில் நிலைத்து வாழ்வோர் பலராவர். 'அன்னை தெரசா' அவர்கள் குணத்தால் மட்டுமே மானிடரிடையே இன்றளவும் வேரூன்றி நிற்பதைக் காணமுடிகிறது. அனைவராலும் அனைத்துக் காலங்களிலும் போற்றப்படுவாள் என அன்னையைக் கத்தோலிக்கத் திருச்சபையினர் பாராட்டுகின்றனர். அத்தகைய உயர் பெருமைக்குரிய அன்னையை சிறந்த குணமுடையவளாக திருவிவிலியமும் அன்னை மரியா அந்தாதியும் மொழிகிறது.

இரக்கம்

பிற உயிரையும் தன் உயிராகக் கருதுவோர் மற்றவர்களது துன்பத்தைத் துடைக்க முன்வருவர். அன்னைமரியும், இயேசுவும், அவரது சீடரும் கானாவூர் திருமண விழாவிற்குச் சென்றனர். இரசம் தீர்ந்து போகவே, திருமண வீட்டார் அனுபவித்த வேதனையைத் தானாகவே உணர்ந்த மரியா, மகன் இயேசுவிடம் அக்குறையை நீக்க வேண்டுகிறார். அது இயேசுவிற்கு முதல் புதுமை செய்ய வழிவகை செய்ததாகத் திருவிவிலியம் உணர்த்துகிறது.

"நீயே முதலில் புதுமை செய்திட
நாதனைப் பணித்தவளே "[12]

என்று அன்னை மரியா அந்தாதியிலும் ஆசிரியர் அந்நிகழ்வினைக் கூறுகின்றார். மானிடரின் குறையைத் தீர்க்கத் தனது மகனையே அர்ப்பணிக்கும் அளவிற்கு அன்னை மனமுவந்து தனது வேதனையைப் பொறுத்துக்கொண்டார். அவள் அனுபவித்த பல துன்பங்களைத் திருவிவிலியம் காட்சிப்படுத்துவதன் வாயிலாக நாம் அதனை அறிந்து கொள்ளலாம்.

"சிலுவை சுமந்து வந்த மகனை
துயரமாய்ப் பார்த்தவளே [13]

என்ற அன்னை மரியா அந்தாதியின் பாடல் வரிகள் அதற்கு சான்று பகர்கின்றன. நீதிமானும், பாவியும் இறைவன் முன்னிலையில் ஒன்றே. நீதிமான்களை அல்ல, பாவிகளையே நான் தேடி வந்தேன் எனத் திருவிவிலியம் கூறுகிறது. தனது தவறை உணர்ந்து மனம்மாறி தந்தையிடம் வந்தால் பாவ மன்னிப்பு உண்டு என்பதை கிறித்துவ மதம் தெளிவுபடுத்துகிறது.

"நோய்க்கு மருந்தாய் நீயே இருந்து
நிம்மதி தந்திடுவாய் "[14]

(அன்னை மரியா அந்தாதி – 95)

என்னும் வரிகளின் வாயிலாக ஆசிரியர் அன்னையிடம், பாவிகளின் துயரமாகிய நோய்க்கு நீயே மருந்தாக செயல்பட்டு சமாதானம் தருவாயாக என வேண்டுவதைக் காணலாம். பிறரது குற்றங்களை மன்னிக்கும் இரக்க குணம் வாய்ந்தவளாக அன்னை திகழ்வதைக் காணலாம்.

அன்பு

தன்னை நாடித்தேடி வரும் அனைவர் மீதும் மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டிருந்தாள் அன்னை.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. "[15]

இவ்வாறாக அன்பைப்பற்றி வள்ளுவர் கூறுவதற்கு ஏற்ப மனுக்குலம் முழுவதையும் நேசித்தவள் மரியா. மாந்தரின் மணிவிளக்காக விளங்கிய அவள் தனது குடும்ப வாழ்விலும் சிறந்து திகழ்ந்தாள் என்பதை திருவிவிலியம் உறுதிப்படுத்துகின்றது. திருமணம் ஒப்பந்தம் செய்யப்பட்டது முதல் தனது வாழ்வின் இறுதிவரைப் பல துன்பங்களை அனுபவித்த போதும் அனைத்துச் செயல்களிலும் சிறந்து விளங்கியவளாகக் காணப்படுகிறாள் அன்னை. வாழ்வில் என்ன நேர்ந்தாலும் கவலைப்படாமல், தனக்கான பணிகளில் 'கடமையைச்செய் பலனை எதிர்பார்க்காதே' உனது உழைப்பிற்கான பலன் குறித்த நாளில் தகுந்த நேரத்தில் தானாக உன்னை வந்தடையும் என உணர்த்தும் பழமொழிக்கு ஏற்ப செயல்பட்டவளாக அன்னை காணப்படுகிறாள்.

" நீயே
தன்னிரு கண்ணாய் சூசையும் யேசுவும்
தாங்கி மகிழ்ந்ததென்ன [16]

என்று அன்னை மரியா அந்தாதியில் ஆசிரியர் குறிப்பிடுவது அன்னையின் வாழ்வில் அவளது கணவனும் குழந்தையாம் இயேசுவும் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சாதாரண தச்சுவேலை செய்யக்கூடிய கணவனோடு இணைந்து குடும்ப வாழ்வை மேற்கொண்ட போதிலும் மனநிறைவோடு அன்னை தனது பயணத்தை மேற்கொண்டுள்ளதைக் காணலாம்.இது போன்ற சில தகவல்களின் அடிப்படையில்தான் இயேசு, மரி, சூசையின் குடும்பத்தை திருக்குடும்பம் என்று கத்தோலிக்கத் திருச்சபை அழைக்கிறது.

ஏழ்மை

தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு மட்டுமல்லாமல் பிறரது வார்த்தைக்கும் கீழ்ப்படியக்கூடிய ஒரு விட்டுக் கொடுக்கும் மனம் உடையவராக அன்னையைத் திருவிவிலியம் காட்சிப்படுத்துகிறது.வானதூதர் மரியின் கனவில் தோன்றி இயேசுவின் பிறப்பை முன்னறிவித்த பொழுது அதற்கு மறுமொழியாக மரியா

"நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே எனக்கு நிகழட்டும். " [17]

என மொழிந்ததை இவ்வசனம் காட்சிப்படுத்துகிறது. தனக்கேதும் அறியா நிலையிலும், குழந்தை வயிற்றில் கருவாகி உள்ளதென கபிரியேல் தூதர் சொன்ன வார்த்தைக்கு இணங்கி மனமுவந்து அதனை ஏற்று அன்னை பதிலளித்ததை இதன் வாயிலாக உணரமுடிகிறது. இதனை

"இருகை கூப்பி வணங்கி
தேவ அடிமை இதோ – எனைப்
பார்த்துச் சொல்லிய சொல்லால் நானே
பரவச மாகினேனே" [18]

என அன்னை மரியா அந்தாதி கூறுகிறது. புகழ், பதவி, பெயர் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பது மனித இயல்பு. ஆனால் அன்னை மரியா எளிமையான மன உணர்வு கொண்டவள் ஆதலால், மீட்பர் பிறப்பார் என்பதை உணர்ந்து தாம் கேட்ட வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததால் அவள் அடைந்த உயர் நிலையானது அளவிடமுடியாதது. குழந்தை இயேசுவை அவரது பெற்றோர் காணிக்கையாய் அர்ப்பணிக்க எருசலேம் கோவிலுக்கு கொண்டு சென்றபோது, சிமியோன் என்பவர் அக்குழந்தையைக் கையில் ஏந்தி அவரது தாயை நோக்கி

" இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஊடுருவிப் பாயும்." [19]

என்று மொழிந்ததை திருவிவிலியம் வெளிப்படுத்துகிறது. மகிழ்வான தருணத்தில் தன்னைப் பார்த்து ஒருவர் உனக்குப் பெரும் துயரம் வரும் என்றுரைத்தபோதும் மரியா கோபம் கொள்ளவில்லை. இதனை உணர்த்தும் விதமாக அன்னை மரியா அந்தாதியில்

"உன்னிரு தயத்தை ஊடுருவும் வாளாய்
இருந்ததுவோ சிலுவை "[20]

எனக்கூறி, சிமியோன் அன்று உரைத்த வாள் என்பது இயேசுவின் சிலுவை மரணத்தைக் கண்டு அன்னை அடையவிருக்கும் துன்பத்தை முன்னரே அறிவித்தார் என விளக்குகிறார் ஆசிரியர்.

தளரா மனம்

குழந்தை வயிற்றில் கருவாகியது முதல் அதன் எதிர்காலத்தையும் அதற்கான தேவைகளையும் மன மகிழ்வோடு கற்பனை செய்து கொண்டிருப்பது பெற்றோரின் இயல்பு. ஆனால் தாய்மை உணர்வை அடைந்தது முதல் தனது இறப்புவரை அன்னை பலவிதமான துன்பங்களையே அனுபவித்து வந்தாள் என்பதை திருவிவிலியம் கூறுகிறது.

"கண்ணீர் துடைத்துக் காரிய மாற்றி
கடமையைச் செய்தவளே"[21]

என்னும் பாடல் வரிகள் அன்னை மரியா அந்தாதியில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இன்பம் துன்பம் இரண்டும் கலந்ததே வாழ்க்கை என்பது நமக்குத் தெரியும். ஆனால், துன்பமே தொடர்ந்து வந்து தன்னை வாட்டிக் கொண்டிருக்கும் தருணத்தை எவ்வித வெறுப்புமின்றி அன்னை ஏற்றுக் கொண்டதை இவ்வரிகள் மொழிகின்றன. 'யானையின் பலம் தும்பிக்கையிலே; மனிதரின் பலம் நம்பிக்கையிலே' என்பதுபோல எதிர்காலத்தில் உலகம் முழுமையும் மீட்பு அடைய செலுத்தப்படும் கல்வாரி பலியை நோக்கி அன்னை மன உறுதியோடு பயணித்ததை உணர்த்துகிறார் ஆசிரியர்.

சாத்தானை வென்றது

'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை' என்பது பழமொழி. உலக மாந்தரின் பாவம் போக்க மனுமகனாக உருவெடுத்த இயேசுவின் தாயாம் மரியன்னையையும் சாத்தானை

வெல்லக்கூடிய அளவு வலிமை மிக்கவளாகவும், வரலாற்று நாயகியாகவும் திகழ்ந்தவளாகத் திருவிவிலியம் காட்சிப்படுத்துகின்றது.

''வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது; பெண் ஒருவர் காணப்பட்டார்; அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்; நிலா அவருடைய காலடியில் இருந்தது; அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்''[22]

இறைவசனம் இவ்வாறாகக் கூறுவதன் வாயிலாக அன்னையைப் பெருமைப்படுத்தும் விதமாக அவளை இறைவன் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டார் என மொழிவதைக் காணலாம். இதனை உள்வாங்கிக் கொண்டு அதனுடைய கருத்துச் சாராம்சத்தை வெளிப்படுத்தும் வகையில்,

''உலகின் பாவம் போக்கும் செம்மறி
உன்னதரின் தாயே – வீண்
கலகம் செய்யும் கரிய மனத்தனை
காலில் மிதிப்பவளே''[23]

என ஆசிரியர் அவர்கள் எடுத்துயம்புவதைக் காணலாம்.

வாழ்த்து

வியக்கத்தக்க செயல்களைச் செய்து பிறரால் போற்றக்கூடிய அளவு சிறந்த குணமுடையோரையே பிறர் வாழ்த்துவர். அரிய செயலைச் செய்ய கபிரியேல் தூதர் பணித்ததும் அதனை மனமுவந்து ஏற்றுக்கொண்ட அன்னையை தூதர் 'அருள் நிறைந்த மரியே வாழ்க'என வாழ்த்தியதை திருவிவிலியம் காண்பிக்கின்றது.

''பேருடை யாள்எனப் பாருல கோரும்
போற்றிடப் பிறந்தவளே ''[24]

இவ்வரிகள் மனிதரால் கற்பனை செய்யமுடியாத அரும் செயல் புரிந்து பிறரால் வாழ்த்தப் பெறுவதற்காகவே இவ்வுலகில் பிறந்தவள் அன்னை என்பதை உரைப்பதைக் காணலாம். கத்தோலிக்கத் திருச்சபையில் இயேசு, மரியா, திருமுழுக்கு யோவான் பொன்றோரது மண்ணகப் பிறப்பு மட்டுமே கொண்டாடப்படுகிறது.மற்ற புனிதர்களின் விண்ணகப் பிறப்புதான் நினைவு கூறப்படுகிறது. திருமுழுக்கு யோவானின் தாயாம் எலிசபெத், மரியை வாழ்த்திய செய்தியானது திருவிவிலியத்தில் இடம் பெற்றுள்ளது. மீட்பராம் கிறித்து அரசருக்கு ஜென்மம் நல்கியவள் ஆதலால் அவளை வாக்குத்தத்தத்தின் பெட்டகம், தர்மத்தின் கண்ணாடி என்றெல்லாம் அழைப்பது திருச்சபையின் முறையாகக் காணப்படுக்கிறது.

''தருமத்தினுடைய கண்ணாடியே
வாக்குத்தத்தத்தின் பெட்டகமே''[25]

இவ்வாறாக உள்ள அன்னையின் புகழ்மாலை அதனை உறுதிப்படுத்துகிறது. இதுபோலவே அன்னை மரியா அந்தாதியிலும்

''ஜென்ம ராக்கினியே ஜெகன் மாதாவே
ஜெபிக்க வந்திடுவாய் ''[26]

''தவமே தவமிருந்து பெற்ற தாயே
தர்மத்தின் கண்ணாடி (யே) ''[27]

என்றவாறு ஆசிரியர் வாழ்த்திப் போற்றுவதைக் காணலாம். இறைவனுக்கு மனித அவதாரம் கொடுக்க உதவியதால் மண்ணுலகிற்கும், உடலோடும் ஆன்மாவோடும் வானுலகிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதால் விண்ணுலகிற்கும் அரசியாக முடிசூட்டப்பட்டவள் அன்னை என்பதால் அன்னையை 'வானோர் அரசி' எனவும் வாழ்த்துவர்.

முடிவுகள்

'அன்னை மரியா அந்தாதி' அந்தாதி என்ற சிற்றிலக்கிய நூலாயினும் கிறித்துவ மதத்தைச் சார்ந்ததாகப் படைக்கப்பட்டதால் திருவிவிலியக் கருத்துக்களையும் உள்ளடக்கித் திகழ்வதை உறுதிப்படுத்துகிறது. இந்நூலகத்துள்ள விவிலியச் சிந்தனைகளை திருவிவிலியத்தின் இன்றியமையாமை, அன்னையின் – தாய்மைப் பண்பு, குணநலன், வாழ்த்து ஆகிய பகுப்புகளின் அடிப்படையில் ஆராய்ந்து தெளிவுபடுத்த முடிகிறது. இவ்வாறு திருவிவிலியத்தில் காணப்படும் தகவல்களை அன்னை மரியா அந்தாதி நூலகத்து ஆசிரியர் கையாண்டுள்ளார் என்பது

உறுதிசெய்யப்படுகிறது. இந்நூல் கிறித்துவ மதத்தைச் சார்ந்த நூலாயினும் உலக மாந்தர் அனைவருக்குமான ஒற்றுமையை வலியுறுத்தும் சில தகவல்களையும் இந்நூல் உணர்த்துகின்றது.

மேற்கோள் விளக்கம்

1. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), பழைய ஏற்பாடு, திருப்பாடல்கள் – 91;12
2. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-126
3. வேங்கடசாமி நாட்டார்.ந.மு(உரையாசிரியர்), கொன்றை வேந்தன், பாடல்-38
4. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, மத்தேயு-1;22-23
5. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-99
6. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-108
7. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-130
8. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, யோவான் -19:26-27
9. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-95
10. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, மத்தேயு-3;16-17
11. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-124
12. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-8
13. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-142
14. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-95
15. பரிமேலழகர்(உரையாசிரியர்), திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், குறள்-72
16. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-141
17. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, லூக்கா -1:38
18. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-2
19. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, லூக்கா -2:35
20. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-47
21. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-143
22. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, திருவெளிப்பாடு -1:1-2
23. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-49
24. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-127
25. தாமஸ் பால்சாமி.பி, இறை இரக்கத்தில் என்றும் மகிழ்ந்திட, பக்கம்-207
26. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-60
27. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, பாடல்-87

பயன்படுத்தப்பட்ட நூல்கள்


1. இறை இரக்கத்தில் என்றும் மகிழ்ந்திட, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.
2. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி, அன்னை பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, 2011.
3. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு),டி.என்.பி.சி.எல்.சி, திண்டிவனம், 12ஆம் பதிப்பு,2001.
4. பரிமேலழகர் (உரையாசிரியர்), திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதல் பதிப்பு, 2019.

வேங்கடசாமி நாட்டார்.ந.மு (உரையாசிரியர்), கொன்றை வேந்தன்- உலக நீதி- மூதுரை, சாரதா பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 2015.


********* ********* ********** ********* ********* ********** ********** **********